# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No. 827/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | லெஷ்மணன் | த-பெ | சுப்பையா |
| ஊர்: | : | காளையார்கோவில் | | |
| வயது: | : | 39/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பேராசிரியர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.02.2026**

**எதிரிகள் ஆஜர். இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காளையார் கோவிலில் வசித்து கோவிலூரில் நாச்சியப்ப சுவாமி கலை அறிவியல் கல்லூரியில் பேராசியராக பணி செய்து வருகிறேன். விபத்தில் காயப்பட்ட தமிழ்மாறனை தெரியும் அவர் எனது அண்ணன் மகன். 05.09.2021 காலை 10.30 மணிக்கு எனது அண்ணன் மகன் அடிப்பட்டு கிடப்பதாகவும் மருத்துவமனை அழைத்து செல்வதாகவும் தகவல் வந்தது. நான் மருத்துவமனை சென்று பார்த்தபோது அவர் மயக்கத்தில் இருந்தார் அவருக்கு வலது தலை, கையில் சிராய்ப்பு காயம் மற்றும் அவர் மயக்க நிலையில் இருந்தார். என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.26 16:01:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
STC. No. 827/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாண்டிதுரை | த-பெ | கருப்பையா |
| ஊர்: | : | கோவிலூார் | | |
| வயது: | : | 54/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | எலக்டீரிசியன் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.02.2026**

**எதிரிகள் ஆஜர். இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் கோவிலூரில் வசித்து எலக்டீரிசியனாக வேலை செய்து வருகிறேன். அசாஅ 1 மற்றும் விபத்தில் காயம்பட்ட தமிழ்மாறன் ஆகியோரை தெரியும். கடந்த 05.09.2021 ம் தேதி காலை 10.30 மணிக்கு கோவிலூரில் பேருந்து நிலையத்தில் நானும் எனது மகன் பாலஹரி காந்தியும் தமிழ்மாறனுக்காக கோவிலூர் பேருந்து நிலையத்தில் காத்து கொண்டிருந்தபோது பேருந்தில் இருந்து கூட்டமாக இறங்கினார்கள், தமிழ்மாறன் கடைசியாக இறங்கினார் . அவர் இறங்குவதற்கு முன் பேருந்து நகர்ந்துவிட்டது . அதில் படிக்கட்டில் கைப்பிடி கம்பி மாட்டி கீழே விழுந்து விட்டார். நான் எனது மகனும் ஓடி போய் பார்த்தோம் அதில் தமிழ்மாறனுக்கு வலது புற கன்னப்பகுதி, காயம் ஏற்பட்டுஇருந்தது அவர் நினைவு இழந்து இருந்தார். உடனே அவரை மீட்டு அதே பேருந்தில் ஓட்டுநரும் நடத்துநரும் ஏற்றிக் கொண்டு சென்றார்கள். தற்போது அவர் நீதிமன்றத்தில் இல்லை. இது குறித்து என்னை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை**

நான் தான் தமிழ்மாறனை போனில் அழைத்து வரச்சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும் எனது மகன் பாலஹரி காந்தி தமிழ்மாறனுக்கு நண்பர் என்பதால் என் மகன் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.26 16:01:42 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
STC. No. 827/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கண்ணன் | த-பெ | சுப்பையா |
| ஊர்: | : | காளையார்கோவில் | | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சலூன் கடை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.02.2026**

**எதிரிகள் ஆஜர். இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காளையார்கோவிலில் வசித்து சலூன் கடை வைத்து இருக்கிறேன் , விபத்தில் காயம்பட்ட தமிழ்மாறன் எனது மகன் ஆவார். கடந்த 05.09.2021ம் தேதி கோவிலூரில் உள்ள ஆண்டவர் பள்ளியில் ஆண்டுவிழா நடந்தது. அதற்காக எனது மகன் பரமக்குடி - தஞ்சாவூர் சென்ற அரசு பேருந்தில் காளையார் கோவிலில் ஏறி கோவிலூரில் இறங்கும் போது நடத்துநர் அவர் இறங்கும் முன் விசில் அடித்ததால் ஓட்டுநர் சைடு கண்ணாடியை பார்க்காமல் பேருந்தை இயக்கியதில் எனது மகன் தவறி கீழே விழுந்தார் அதில் அவருக்கு வலது பக்க கண் , பின்புற தலை மற்றும் முகத்தில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு மயங்கி விட்டார் அவருக்காக காத்திருந்த நண்பர் பாலகிரி அவரை மீட்டு அதே பஸ்ஸில் ஏற்றி காரைக்குடி PKN மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் அப்போது அவர் நினைவு இழந்து இருந்தார். எனக்கு இந்த தகவலை நண்பர் பாலகிரிதான் சொன்னார். போலீசில் புகார் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி

**புகார் மனு அசாஆ 1,** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

சம்பவம் நடந்த தேதி 05.09.2021 காலை 10.30 மணி என்றால் சரிதான். எனக்கு அன்றைய தினமே தகவல் கிடைக்கப்பெற்று எனது மகனை பார்க்கச் சென்றேன் சரிதான். நான் மறுதினம் 06.09.2021 ம் தேதி 14.15 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அசாஆ 1 புகாரில் எனக்கு பொது மக்களில் யாரோ ஒருவர் தகவல் சொன்னார் என்று சொன்னால் சரிதான். நான் பாலகிரி தான் தகவல் சொன்னார் என்றும்சொன்னேன் என்றும்அவர்கள்தான் அசாஆ 1 ஆவணத்தில் மாற்றி எழுதிவிட்டார்கள் என்றால் சரிதான். எனது மகனிடம் செல்போன் உள்ளது. எனது மகன் அவரது பள்ளி ஆண்டு விழாவானது காரைக்குடி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள சில்வர் ஸ்பூன் என்ற ேஹாட்டலில் நடைபெறுகிறது என்று சென்றார் என்றால் சரிதான். எனது மகன் காரைக்குடிக்கு டிக்கெட் எடுத்திருந்தார். எனது மகன் கோவிலூரில் இறங்கி எனது நண்பர் பாலகிரியுடன் தான் போவேன் என்று சொல்லி விட்டு சென்றார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் புகாரில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்து பற்றிய சம்பவம் எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. என்னை போலீசார் குன்றக்குடி காவல் நிலையம் மற்றும் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க விபத்து காப்பீடு பெறுவதற்காக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் ஒரு நாள் காலதாமதமாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.26 16:01:48 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.